**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2025-ஆம் ஆண்டு நவம்பர்  மாதம்  24-ஆம் நாள்,**
**CC.39/2016**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 24.11.2025-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. செந்தாமரை செல்வி | வயது | : | 39 |
| க.பெ | : | திரு. திருமால்வளவன் | நிலை | : | **PW- 1 (LW-1)** |

**Accused is present with counsel. Prosecution police is present.**

**சாட்சி முதல் விசாரனை -**

1) நான் தற்போது குறவன்மேடு கிராமத்தில் வசிக்கிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்த திருமால்வளவன் எனது கணவர் ஆவர். கடந்த 27.02.2016-ஆம் தேதி, மாலை 5 மணியளவில் என்  ஊரில் வசிக்கும் சுந்தரராஜன் என்பவர் என்னிடம் சிதம்பரம் கடலூர் மெயின்ரோட்டில் பெரியப்பட்டு அருகில் என் கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக, இவ்வழக்கு விபத்து நடந்த இடத்திலிருந்த ஆட்டோ ஓட்டுநர் ஒருவர் போனின் மூலமாக தகவல் சொன்னதாக என்னிடம் வந்து சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு கிளம்பிசென்றேன்.அங்கிருந்தவர்கள் என் கணவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் அங்கு செல்வதற்குமுன்பே  ஆம்புலன்ஸ்ஸில்  என் கணவரின் உடலை கடலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். பரங்கிப்பேட்டை நீதிமன்றத்திலிருந்து  குறவன்மேட்டிற்கு என் கணவர்  தெற்கிலிருந்து வடக்குநோக்கி கருப்பு கலர் TVS Apache என்ற PY 01 BP 9036 எண் கொண்ட  இரு சக்கர வாகனத்தில் சாலையின் இடதுபுறமாக செல்லும்போது டிப்பர் லாரி ஒன்று அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்ததால் என் கணவர்மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள், டிப்பர் லாரியின் நம்பர் தெரியாது. அந்த வாகனத்தை ஓட்டிய நபர்  யாரென்று எனக்கு தெரியாது.

2) நான்  பிறகு கடலூர் அரசு மருத்துவமனைக்கு  சென்று இறந்த என் கணவரின் உடலைப் பார்த்தேன். அதன்பின்பு புதுச்சத்திரம் காவல் நிலையத்திற்கு வந்து இவ்வழக்கு விபத்து சம்மந்தமாக  புகார்  கொடுத்தேன். இந்நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான், அந்த புகார்மனுவை நான் தான்

கொடுத்தேன். அப்புகார் மனு **அ.சா.ஆ.1**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர். (இச்சாட்சியத்தை அளிக்கும்போது சாட்சி அழுதுக்கொண்டே சொன்னார்).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) இந்த விபத்து சம்பவம் நடக்கும் நேரத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் வீட்டில் இருந்தேன். விபத்து சம்பவம் தொடர்பாக என்னிடம் யார் சொன்னது என்றால் ஊர்க்காரர்கள் சொன்னதாக என் வீட்டில் உள்ளவர்கள் சொன்னார்கள். அந்த தகவலை சொல்லும்போது மாலை சுமார் 5 மணி இருக்கும். விபத்து நடந்த இடத்திற்கும் எங்கள் ஊருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 15 கிலோமீட்டர் தூரம் இருக்கும். விபத்து நடந்த இடத்திற்கும் எங்கள் ஊருக்கும் இடையே பேருந்து வசதி அவ்வளவாக இல்லையென்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு எந்த, யாருடைய வாகனத்தில் நான் சென்றேன் என்றால் இரு சக்கர வாகனத்தில் சென்றேன், யாருடையது என்று தற்போது ஞாபகமில்லை. நான் சம்பவ இடம் சென்றபின்பு அங்கு என் கணவரின் உடலை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டதால் அதே இரு சக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு நேரடியாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் எவ்வளவு நாள் இருந்தேன் என்றால் நான் மருத்துவமனைக்கு சென்றவுடன் மயக்கம் அடைந்ததால் என்னை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டனர்.

2) மறுநாள் காவல் நிலையத்திலிருந்து அழைத்து என்னிடம் புகார் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். நானும் என் ஊர்க்காரர்கள் சுமார் 5 பேரும் சேர்ந்து காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். 1)சுந்தரராஜன் த.பெ கோவிந்தசாமி 2) ரகுராம்சிங் த.பெ சாமிதுரை 3) தனசேகரன் த.பெ முத்துக்குமாரசாமி 4) அழகேசன் த.பெ கலியபெருமாள் 5) வேல்முருகன் த.பெ கலியன் 6) ரகு த.பெ ராமலிங்கம் ஆகியோர் என் ஊர்க்காரர்கள் என்றாலும் அவர்களுடன் நான் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். மேற்படி நபர்களிடமிருந்து பெயர், முகவரி போன்ற விவரங்கள் அவர்களின் கையொப்பங்களையும் போலிசார் வாங்கிக்கொண்டார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு ஞாபகமில்லை. காவல் நிலையத்தில் சுமார் எவ்வளவு நேரம் இருந்திருப்போம் என்றால் சுமார் 15 நிமிடங்கள் இருந்திருப்போம்.

3) அ.சா.ஆ.1 புகார் மனுவை யார் எழுதியது என்றால் என்னுடன் வந்த ஊர்க்காரர்களில் ஒருவர் எழுதினார். அ.சா.ஆ.1 புகார் மனுவை எழுதிய பிறகு போலிசாரிடம் காட்டி அதிலுள்ள வாசகங்கள் சரியாக உள்ளதாக போலிசார் சொன்னபிறகு நான் அதில் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். அதன்பிறகு போலிசார் எத்தனை நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை. புகார் கொடுத்ததற்குபிறகு போலிசார் வீட்டிற்கு வந்து விசாரித்தார்களா என்றால் இல்லை. என் கணவர் இரு சக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் வைத்திருந்தாரா என்றால் வைத்திருந்தார். என் கணவர் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்துக்கு வாகன காப்பீடு இருந்ததா என்றால் இருந்தது. என் கணவருக்கான ஓட்டுநர் உரிமம், வாகனத்திற்கான

RC Book, Insurance போன்ற ஆவணங்களை போலிசார் கேட்டார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை, என் கணவரின் தம்பி திருமால்பதி என்பவருக்குதான் அதுப்பற்றிய விவரம் தெரியும். என் கணவரின் தம்பி போலிசாரிடம் மேற்படி ஆவணங்கள் குறித்து பேசினாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என் கணவர் ஓட்டிச்சென்ற இரு சக்கர வாகனம் காவல் நிலையத்தில் இருந்ததா என்றால் அதுப்பற்றி தெரியவில்லை. அந்த இரு சக்கர வாகனம் தற்போது எங்குள்ளது என்று தெரியுமா என்றால் தெரியவில்லை, வாகனம் முழுவதும் உடைந்துவிட்டதாக என் கணவரின் தம்பி சொன்னார். என் கணவருக்கு வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் இல்லையென்றாலும் அவர் சரியாக வாகனத்தை ஓட்டாததுதான் விபத்து ஏற்ப்பட்டதற்கு காரணம் என்றாலும் சரியல்ல. என் கணவரின் இரு சக்கர வாகனத்திற்கு RC Book, Insurance போன்ற ஆவணங்கள் இல்லையென்றால் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2025-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ஆம் நாள்,**
**CC.39/2016**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 24.11.2025-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வேல்முருகன் | வயது | : | 56 |
| த.பெ | : | திரு. கலியன் | நிலை | : | **PW- 2 (LW-5)** |

**Accused is present with counsel. Prosecution police is present.**

**சாட்சி முதல் விசாரனை -**

1) நான் தற்போது குறவன்மேடு கிராமத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 10 வருடங்களுக்குமுன்பு தேதி, மாதம் குறிப்பிட்டு நினைவில் இல்லை, என் ஊர்க்காரர் சுந்தரராஜன் என்பவர் என்னிடம் போனில் திருமால்வளவன் விபத்து ஏற்பட்டு இறந்ததாக கூறினார். சுந்தரராஜனுக்கு ஒரு ஆட்டோ ஓட்டுநர் சொன்னதாக சொன்னார். இதனால் சம்பவ இடத்திற்கு சென்று பார்க்கும்போது 108 ஆம்புலன்ஸ்ஸில் திருமால்வளவனை கடலூர் GHக்கு அழைத்துச் சென்றதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். பின்பு நான் கடலூர் GHக்கு சென்று அங்கு பிணவறையில் வைத்திருந்த திருமால்வளவன் உடலை பார்த்தேன். போலிசார் அங்கு செய்த பிரேத விசாரணையில் என்னை சாட்சியாக இருக்க கேட்டார்கள் நானும் சாட்சி கையொப்பம் போட்டேன். இந்நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை சம்மனில் உள்ள 2-ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான், அந்த பிரேத விசாரணை சம்மனில் உள்ள 2-ஆவது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.2**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -** நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கூலி வேலைசெய்கிறேன். வேலைக்கு எத்தனை மணிக்கு சென்று திரும்புவேன் என்றால் காலை 7 மணிக்கு சென்று மதியம் 1 மணிக்கு திரும்புவேன். விபத்தைப்பற்றி யார் எப்போது எனக்கு சொன்னது என்றால் சுமார் 4.15 மணிக்கு சுந்தரராஜன் என்பவர் சொன்னார். இவ்வழக்கில் இறந்த திருமால்வளவன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் அண்ணனின் மகன். 1)சுந்தரராஜன் த.பெ கோவிந்தசாமி 2) ரகுராம்சிங் த.பெ சாமிதுரை 3) தனசேகரன் த.பெ முத்துக்குமாரசாமி 4)அழகேசன் த.பெ கலியபெருமாள் 5) ரகு த.பெ ராமலிங்கம் ஆகியோர் என் ஊர்க்காரர்கள் மற்றும் உறவுக்காரர்கள் என்றால்

சரிதான். மேற்படி நபர்களுடன் எப்போது காவல் நிலையம் சென்றேன் என்றால் விபத்து நடந்த மறுநாள் காலை சுமார் 9 மணிக்கு சென்றோம். காவல் நிலையத்தில் வைத்து என்னுடைய பெயர், முகவரி போன்ற விவரங்களை போலிசார் வாங்கிக்கொண்டார்களா என்றால் விபத்து நடந்த அன்றே மருத்துவமனையில் வைத்து வாங்கினார்கள். ஊர்க்காரர்களுடன் செல்லும்பொழுது காவல் நிலையத்தில் வைத்து மேற்படி நபர்களின் பெயர், முகவரி போன்ற விவரங்களை போலிசார் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.2 கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து போலிசார் என்னிடம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**